★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam:Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆவணி 23உ வெள்ளி (7—9—56) ★ ★ வெளியூர்: ஆவணி 24உ சனி (8—9—56) [இதழ் 76

மணிக்கு 312 மைல் வேகத்தில் ஓடும் புதுரக மோட்டார் கார்!

டர்போ—ஜெட் மோட்டார் காரின் பரிசோதனை மாதிரி ஒன்று முதல் தடவையாக, ரஷ்யாவிலுள்ள கார்க்கி மோட்டார் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இந்த மோட்டார் கார் அதிவேகமாகச் செல்வதற்குகந்த 'கூம்பு' வடிவத்தில் அமைந்துள்ளது. பூர்வாங்க சோதனைகளின் போது, இந்த மோட்டார் வண்டி மணி ஒன்றிற்கு 125 மைல் ஓட முடியும் என்பது புலனாயிற்றென்றும், விசேடமான முறையில்

(4-ம் பக்கம் பார்க்க)

திருவண்ணாமலை நகரசபையில் வெளிநடப்பு

நிதி அமைச்சரை வரவேற்பதற்கு எதிர்ப்பு

'தமிழ்நாடு எனப் பெயரிட மறுத்தவருக்கா வரவேற்பு?'

'இதழ் வாசித்தளிப்பதைக் கண்டு நாங்கள் நாணுகிறோம்'

'எங்கள் கண்டனத்தைக் காட்ட வெளியேறுகிறோம்'

ப. உ. சண்முகத்தைப் பின்பற்றி 6 நகரசபை உறுப்பினர்களும் பொதுமக்களும் வெளியேறினர்

திருவண்ணாமலை, செப். 6—

திருவண்ணாமலை நகரசபை, சென்னை நிதி அமைச்சர் சுப்பிரமணியத்திற்கு நேற்று ஓர் வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்தது.

அமைச்சர் மேடைக்கு வந்தார்; நகரசபைத் தலைவர் வரவேற்பு இதழைப் படிக்க எழுந்தவுடனே தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் எழுந்து, 'தமிழ்நாட்டிற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைக்க மறுத்துவிட்டவருக்கு வரவேற்பு அளிப்பதைக் கண்டு நாணுகிறோம்; வெளியே போகிறோம்' என்று கூறிவிட்டுக் கூட்டத்திலிருந்து வெளியேறினர்.

அவரைத் தொடர்ந்து தோழர் முருகையன், தோழியர் அமராவதி-முருகையன், தோழியர் ஆண்டாள், தோழர்கள் முனுசாமி, சின்னசாமி ஆகிய நகரசபை உறுப்பினர்களும், கூடியிருந்த ஏராளமான பொதுமக்களும் கூட்டத்திலிருந்து வெளியேறிவிட்டனர். (ச. கி.)

இலஞ்ச ஒழிப்பு!

புதுடில்லி, செப். 6—

இரயில்வே இலஞ்ச ஒழிப்புக் குழுவினர் தந்த சிபாரிசுகளில் ஏறத் தாழ எல்லா சிபாரிசுகளையும் இந்திய சர்க்கார் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும், அச்சிபாரிசுகள் அனைத்தும் இப்போது அமுல் நடத்தப்படுவதாகவும் மக்கள் சபையில் அமைச்சர் லால் பகதூர் சாஸ்திரி அறிவித்திருக்கிறார்.

கேட்டீரா, சேதி!

நாட்டில் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் தொழிலை சர்க்கார் மேற்கொண்டது முதல் 6 மாத காலத்திற்குள், சென்ற ஆண்டைவிட அதிகமாக ரூ 17 கோடிக்கு தொழில் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடநாட்டில் உருக்குத் தொழிற்சாலைகள்!

தேவைப்படும் தொழிலாளர் எண்ணிக்கை

புதுடில்லி, செப். 5—

சிரம்ப அனுபவம் பெற்ற எஞ்சினியர்கள் 120 பேர்; பயிற்சியும் பட்டமும் பெற்ற எஞ்சினியர்கள் 1,200 பேர்; தொழில் நுணுக்கக் கல்வி பெற்ற தொழிலாளர்கள் 10,000 பேர்; சிறிதளவு தொழில் அனுபவமுடைய தொழிலாளர்கள் 7,000 பேர். இத்தனை பேர் தேவைப்படுகிறார்களாம், வடநாட்டில் நிறுவப் பட்டுவரும் மூன்று உருக்குத் தொழிற்சாலைகளுக்குமாக!

தேவையான எஞ்சினியர்கள் பலரும் மேற்கு ஜெர்மனி, ரஷ்யா, அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் பயிற்சி பெறுவராம்!

இந்தத் தகவலை, மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி தெரிவித்திருக்கிறார்.

2,000 நியாய விலைக் கடைகள்

தென்னாட்டில் அரிசி விலை ஏற்றத்தைத் தடுக்க டில்லியின் திட்டம்

சென்னை, மைசூர், திரு-கொச்சி ஆகிய மூன்று மாநிலங்களிலும் இப்போது உள்ள 250 நியாய விலைக் கடைகளை 2,000 ஆக உயர்த்தப்போகிறோம் என்று மத்திய உணவிலாகா துணை மந்திரி கிருஷ்ணப்பா கூறியிருக்கிறார்.

"இப்போது சுமார் 45,000 முதல் 50,000 டன்வரை அரிசி எங்களிடம் உள்ளது; இந்த மாதத்தில் மேலும் 50 ஆயிரம் டன் அரிசி பர்மாவிலிருந்து வருகிறது. இந்த அரிசியை நியாய விலைக் கடைகள் மூலம் நாங்கள் சரக்கு துவங்கினால் வியாபாரிகள் தொடர்ந்து பொருள்களைப் பதுக்கி வைத்துக்கொண்டிருக்க முடியாது"

என்றும் அமைச்சர் கூறியிருக்கிறார்.

நபிகள் நாயகம் மீது அவதூறு கூறும் புத்தகம்

நாடெங்கும் முஸ்லீம் மக்கள் கொதிப்பு

வெளியிட்ட கவர்னருக்கு எதிராகக் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம்

'முன்ஷி பொறுப்பல்ல' என்று நேருவின் நொண்டிச் சமாதானம்

ஆர்ப்பாட்டங்களுக்குப் பாகிஸ்தானின் தூண்டுதல் எனப் பழி

லக்னோ, செப். 6—

உத்திர பிரதேச கவர்னரான கே. எம். முன்ஷிக்கு எதிராக நேற்று போபால் இரயிலடியில் பெரும் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றிருக்கிறது.

பம்பாயிலிருந்து லக்னோ செல்லும் வழியில் அவர் போபாலில் இறங்கி பல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதாக ஏற்பாடாகியிருந்தது.

ஆனால் ஆர்ப்பாட்டங்கள் குறித்து முன்கூட்டியே அறிந்திருந்த முன்ஷி, போபால் நகரில் தலைகாட்டாமலேயே நிகழ்ச்சிகளை எல்லாம் ரத்து செய்துவிட்டு நேராக லக்னோவிற்குக் கம்பி நீட்டியிருக்கிறார்.

கருப்புச் சின்னமணிந்திருந்த 5000-த்திற்கும் அதிகமான முஸ்லிம் மக்கள் இந்த ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொண்டிருக்கின்றனர்.

முன்ஷியை ஆசிரியராகக் கொண்டு இயங்கிவரும் 'பாரதீய வித்ய பவன்' என்ற பம்பாயிலுள்ள புத்தக வெளியீட்டு நிறுவனத்தார் 'மதத் தலைவர்கள்' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள புத்தகம் ஒன்றில் முகம்மது நபியைப் பற்றி அவதூறாக எழுதியிருப்பதாகவும், அந்த அவதூறான புத்தகத்தை உடனடியாக சர்க்கார் தடைசெய்ய வேண்டும் என்று கோரியும், அப்படி ஒரு புத்தகத்தை வெளியிட்ட ஆசிரியரான கே. எம். முன்ஷியைக் கண்டிக்கவும் ஆகத்தான் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில் அலிகார் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் முன்ஷிக்குக் கொடும்பாவி கட்டி இழுத்து, கூட்டம் ஒன்றில் கொடும்பாவியைக் கொளுத்தியதாகவும் உ. பி. சட்ட சபையில் இன்று தகவல் தரப்பட்டிருக்கிறது.

'உ. பி. கவர்னரான முன்ஷிக்கு எதிராக நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டங்கள் பாகிஸ்தான் ஏஜெண்டுகளால் தூண்டப்பட்டவை என்று சந்தேகிக்கப்படுவதில் உண்மை இருக்கலாம்,' என்றும், உ. பி. மாநில உதவி போலீஸ் மந்திரி ஜே. பி. ராவத் என்பார் தெரிவித்திருக்கிறாராம்.

சம்பவங்கள் பற்றித் தீவிரமான விசாரணை நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் அவர் தகவல் தந்திருக்கிறார்.

இதற்கிடையில், டில்லி மாநிலக் கன் சபை உறுப்பினரும், இந்திய முஸ்லீம் லீக் தலைவருமான முகம்மது இஸ்மாயில் அவர்களுக்கு இந்தியப் பிரதமர் நேரு எழுதியுள்ள கடிதம் ஒன்றில், 'விவகாரத்தில் உள்ள புத்தகத்தில் சில பகுதிகள் ஆட்சேபத்திற்குரியவைதான்' என்று ஒப்புக்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. ஆனால், 'புத்தகம் வெளியிட்டதற்கு முன்ஷி பொறுப்பாளியல்ல' என்று நேரு சமாதானம் கூறியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

முன்ஷியே அதுபோன்ற ஆட்சேபத்திற்குரிய சில அம்சங்கள் வெளியிடப்பட்டதற்காக வருத்தப்பட்டதாகவும், உடனடியாக அந்த அம்சங்களை நீக்கிவிட ஏற்பாடு செய்திருப்பதாகவும் நேரு கூறியிருக்கிறார்.

பாட்னாவில் கடையடைப்பு

பாட்னா நகரில், இன்று, முஸ்லீம் கடைகள், வர்த்தக நிறுவனங்கள் எல்லாம், 'பாரதீய வித்யா பவன்' வெளியிட்ட புத்தகம் நபிகள் நாயகத்தை அவதூறுக்குள்ளாக்கியிருப்பதைக் கண்டிக்கும் வகையில் கடையடைப்பு செய்துள்ளன என்று ஒரு செய்தி கிடைத்திருக்கிறது.

பாக். மந்திரி மீது கல்மாரி!

ஆர்ப்பாட்டக்காரர் கலாட்டா

டாக்கா, செப். 6—

பட்டினிப் பட்டாள ஊர்வலத்தின்மீது கடந்த செவ்வாயன்று துப்பாக்கிப்பிரயோகம் செய்ததற்காகக் கோபங்கொண்ட கூட்டம் ஒன்று, பாகிஸ்தான் மத்திய உணவமைச்சர் அப்துல் லத்தீப் பிஸ்வாஸ் என்பார்மீதும் முன்னாள் மந்திரியான அப்துல் சலாம்கான் மீதும் கல்லையும் மண்ணையும் வாரி இறைத்து ஆர்ப்பாட்டம் செய்ததாகக் கூறப்படுகிறது.

உணவு மந்திரி காரில் வந்து கொண்டிருந்தபோது, அவரது காரை நிறுத்தி காரிலிருந்து இறங்குமாறு செய்து அவரைப் பேசுஞ் சாணத்தால் நாகரிக் கலாட்டா செய்தனராம் ஒரு கூட்டத்தவர்!

முன்னாள் மந்திரியான சலாம்கான், கூட்டத்தினரின் பிடியிலிருந்து தப்புவது பெரும்பாடாகி விட்டதாம்.

20,000 அஞ்சல் நிலையங்கள்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் நாட்டில் புதிதாக 20,000 அஞ்சல் அலுவலகங்களும் 1,400 தந்தி அலுவலகங்களும் திறக்கப்படும் என்று மத்திய தபால் இலாகா துணை அமைச்சர் ராஜ் பகதூர் மக்கள் சபையில் அறிவித்திருக்கிறார்.

★★★★★★★★★★★★-★★★★★★★★★★★★★

தலைமை நிலையச் செய்தி :

மத்திய செயற்குழு

(Working Committee)

9—9—56 ஞாயிறு பிற்பகல் 3-மணிக்கு, சென்னை —இராயபுரம் 'அறிவக'த்தில், தி. மு. கழக மத்திய செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

★★★★★★★★★★★★★-★★★★★★★★★★★★★

நம் நாடு

தி.மு.க. தினஇதழ்

சென்னை 7—9—'56 வெள்ளி

மகளிர் மன்றம்

மக்கள் தொகையின் ஒரு பகுதியான பெண் குலத்தை இழிவாகக் கருதி, பொதுத் துறைகள் அனைத்திலும் அவர்கள் கிழல்படாது தானே ஆதிக்கம் செலுத்திவரும் பழமைப் பற்றுடைய ஆண்களைக் கொண்ட சமுதாயமும், அத்தகையவர்களால் ஆளப்பட்டு வரும் நாடும் விரும்பத்தகுந்த முன்னேற்றத்தை எய்தப் பெருது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். எவ்வளவு விரைவாக இந்தப்பாழ்பட்ட மனப்பாங்கு சரியத் தொடங்குகிறதோ, அவ்வளவு விரைவாகச் சமுதாய வளர்ச்சியும் நாட்டின் முற்போக்கும் சாத்தியமாகும் என்பது சொல்லாமலே விளங்கும்.

ஒருவர் அளிக்க மற்ருருவர் பெறுவது என்ற முறை, உரிமையின் இலட்சணமன்று. அவ்விதல் - ஏற்றல் முறைக்கு எப்பெயர் பொருத்தமுடையதாக இருப்பினும், அதற்கு உரிமை என்ற பெயர் எந்த அளவிலும் பொருந்தக்கூடியதன்று.

பெண்ணின் உரிமை வாழ்வை முதற்கண் கவர்ந்து, பின்னர் தனது தொண்டடிமையாய்ப்பெண்ணை ஆக்கிக்கொண்டதால் ஆண் கண்ட நலந்தான் என்ன? பெற்ற இன்பந்தான் யாது?

அல்லல்—தீராத பெரும் அல்லல் என்ற பதிலைத்தான் மேற்குறிப்பிட்ட வினவிற்கு விடையாகக் கூறவேண்டும்.

பெண்குலத்தைத் தனக்கு அடிமையாக்கிக் கொண்ட ஆண்குலம், தன்னையும் அறியாமல் அப் பெண்குலத்திற்குத் தன்னை நிரந்தர அடிமையாக்கிக் கொண்டு, அடிமை வாழ்வின் பெருங்கேட்டினை அனுபவித்துக்கொண்டு வருவது கண்கூடு. அடிமை தன்போன்ற அடிமையைத்தான் உருவாக்க விழைவான்—முயல்வான் என்பது ஒப்ப முடிந்த உண்மையாகும்.

நமது திராவிடச் சமுதாயம் உரிமை வாழ்வை எய்தவும், வாழ்வின் நல்லியல்புகளைப் பெற்று மகிழ்ந்திருக்கவும், நமது மாதர் குலம் விழித்தெழ வேண்டும். உரிமை வாழ்வின் உயர்வை நம்மவர் இல்லந்தோறும் நல்லவர் உள்ளந்தோறும் குடியேற்ற உடனடியாகச் செயலாற்ற முன்வர வேண்டும்.

அவ்வகையில் உரிய கடமையாற்ற, நமது திராவிட இனச் செல்வியர்களில் சிலர் 'மகளிர் மன்றம்' கண்டு, அவர்களிடமிருந்து நாடு எதிர்நோக்கும் நற்பணியாற்ற முனைந்திருப்பது கண்டு நாம் பூரிக்கின்றோம். அவர்கள் அணி பெருகவும், பணி சிறக்கவும் வேண்டுமென இதயபூர்வமாக நாம் விழைகிறோம்.

மனித குலத்தின் உரிமை வாழ்வைப் பாதுகாத்துவரும் துறைகள் பலவற்றுள் ஒன்று அரசியல் துறையும் ஒன்றுகும். எனவே அரசியல் துறைக்கு மட்டும் சிறப்பளித்து மற்றத் துறைகளை அலட்சியப்படுத்தி ஒதுக்கித் தள்ளிவிடுதல்கூடாது. இவ்வாறு கூறப்படுவதினுல், மற்றத் துறைகளில் கருத்தைச் செலுத்தி அரசியல் துறையை ஏறெடுத்துப் பாராமல் இருக்கவும் கூடாது.

மனித வாழ்க்கைக்கும், ஒவ்வொரு துறைக்கும் உரிய தொடர்புகளை நன்கு உணர்ந்து, ஒவ்வொரு துறையும் ஒன்றையொன்று விழுங்கிவிடாத வகையில் நமது 'மகளிர் மன்றம்' தனது செயல் முறையை வகுத்துக்கொள்ள வேண்டும். அதற்குத் தேவைப்படும் தொண்டுள்ளமும், நுண்ணறிவும் நமது மகளிர் மன்றக் காவலர்களுக்கு இயல்பாகவே அமைந்துள்ளது என்பது சொல்லாமலே விளங்கும்.

மடமையை விரட்டி பகுத்தறிவை ஊட்டவும், கல்லாமையை ஒழித்து எழுத்தறிவைப் பெருக்கவும், பகட்டை அழித்துப் பண்பை வளர்க்கவும், பொய்மையை அகற்றி மெய்மையை நிலைநாட்டவும், 'மகளிர் மன்றம்' தனது செயல் முறையாகக் கொள்ளும் என எண்ணுகிறோம்.

பட்டி தொட்டிகள் எல்லாம் 'மகளிர் மன்றம்' உருவெடுக்க வேண்டும். நீண்டகாலச் செயல் முறையான இதை நிறைவேற்றுவதற்கு முன், ஒவ்வொரு மாவட்டத்திலும் பெருநகரங்களிலும் தனது கிளைகளை நிறுவும் செயல் முறையை, மன்றம் இப்பொழுதே மேற்கொள்ள வேண்டும். இம்முயற்சியில் பெறுகின்ற படிப்பினை நீண்டகாலச் செயல்முறையை இலகுவாக நிறைவேற்றுவதற்குப் பெரும் படிப்பினையாக அமையக்கூடும்.

மகளிர் மன்றத்தின் இலட்சியம் வெற்றி பெற, மன்றத்திற்குத் தாய்க்குலத்தின் ஒத்துழைப்பு இன்றியமையாதது. வயதுவந்த ஒவ்வொரு மகளிரும் மன்றத்தின் உறுப்பினர்களாகத் தங்களை ஆக்கிக் கொள்ளவேண்டும். அத்துறையில் மன்றத்தின் பாதுகாவலர்களின் ஆற்றல் அளவிடற்கரியதாகும்.

மகளிர் மன்றம் கண்டவர் அனைவரையும் நாம் பாராட்டுகிறோம். அவர்கள் தொண்டு விரைவில் சிறப்பெய்த வேண்டும் என வாழ்த்துகிறோம்.

சீன - பர்மா எல்லைத் தகராறு

சுமுகமாகத் தீருமென பர்மியப் பிரதமர் நம்பிக்கை

இரங்கூன், செப். 4—

சீனவுடன் இருந்து வருகிற எல்லைத் தகராறுகள் சுமுகமாகத் தீர்ந்து விடலாமெனத் தாம் நம்புவதாகப் பர்மியப் பிரதமர் ஊ-பா-சா கூறியிருக்கிறார். ஆனால், வெறும் பேச்சு வார்த்தைகள் மட்டுமல்லாமல் மற்றுமுள்ள வழிகளையும் மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்றார், சமரசம் ஏற்படுவதற்கு முன்னதாக பர்மாவிலிருந்து சீனத் துருப்புகள் வெளியேறிவிட வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

வருமான வரி இலாகா அதிகாரிகள்

இலஞ்சம் வாங்கியதாகக் கண்டுபிடிப்பு

புதுடில்லி, செப். 6—

1954—55-ம் ஆண்டுகளில் வருமானவரி இலாகாவைச் சேர்ந்த 17 கெஜட் பதிவு பெற்ற அதிகாரிகளும், 4 கெஜட் பதிவில்லாத அதிகாரிகளும் இலஞ்சக் குற்றம் புரிந்ததாகக் கண்டு பிடிக்கப்பட்டனர் என்றும், இவர்களில் மூவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர் என்றும் மாநிலங்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதில் தரப்பட்டிருக்கிறது.

37,000 ஏகரில் உணவுத் தானிய உற்பத்திக்கு

இந்தியாவுக்கு ரஷ்யா வழங்கும் இயந்திரங்கள்

மாஸ்கோ, செப். 4—

இந்தியாவில் 37,000 ஏகர் நிலத்தில் உணவுத்தானிய உற்பத்திக்கு ஒரு சர்க்கார் பண்ணை ஏற்படுத்துவதற்குப் பல இயந்திரங்களை இனமாகக் கொடுத்து உதவ ரஷ்ய சர்க்கார் முன்வந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த 37,000 ஏகர் நிலத்தையும் சாதாரணமாக 60 டிராக்டர்களை இயக்கவைத்து, 20 நாட்களில் உழுதுவிடலாமாம்; ஆனால் 60 மாடுகளைக்கொண்டு இந்நிலத்தை உழவேண்டுமானுல் 3 ஆண்டுக் காலம் தேவைப்படுமாம்!

அத்தகைய 60 டிராக்டர்களை ரஷ்யா இந்தியாவிற்குத் தர இருக்கிறதாம். அவற்றுள் 20 டிராக்டர்கள் 80 குதிரை சக்தி பெற்ற மிகப் பெரிய டிராக்டர்களென்றும், எவ்வளவு கெட்டியான கட்டாந்தரையையுங்கூட அவை சுலபமாக உழுதுவிடும் என்றும் கூறப்படுகிறது.

அறுவடை, போர் அடித்தல், தானியத்தைச் சுத்தம் செய்தல் ஆகிய வேலைகளைச் செய்யும் — ஒவ்வொன்றும் 300 பேர் செய்யக்கூடிய வேலையைச் செய்து முடிக்கும் ஆற்றல் கொண்ட 60 'கம்பைன்' இயந்திரங்களை ரஷ்யா அனுப்பியிருக்கிறதாம். மேலும், அந்தத் தானியங்கள், பண்டங்கள் ஆகியவற்றை எடுத்துச் செல்வதற்கு 15-லாரிகளும் அனுப்பப்பட்டிருக்கின்றனவாம்.

இவை தவிர, கலப்பைகள், விதை டிரில்கள், தானியத்தை உலரவைக்கும் கருவிகள் முதலான கருவிகள் உட்பட 800 வேறு வகை இயந்திரங்களையும், ரஷ்ய சர்க்கார் அனுப்பியிருக்கிறதாம்.

சாலைகள் போடவும், நீர்ப்பாசன வேலைகளுக்கும் பயன்படக்கூடிய மண் வாரிக் கொட்டும் கருவிகள், குழி தோண்டும் கருவிகள் புல்டோசர்கள் ஆகிய கருவிகளும், இயந்திரங்களைப் பழுது பார்ப்பதற்கென 5 நடமாடும் தொழிற்சாலைகளும் அனுப்பப்பட்டிருக்கின்றன நடமாடும் மின்சார நிலயம், உலோகங்களை அறுக்கும் இயந்திரங்கள், 100 'லைன்'கள் கொண்ட ஒரு டெலிபோன் எக்ஸ்சேஞ்சு ஆகியவைகளையும் ரஷ்யா அனுப்பியிருக்கின்றதாம்.

பணவீக்க நிலையைக் கட்டுப்படுத்த!

சர்க்கார் இயன்ற அளவு முயற்சிப்பார்களாம்

புதுடில்லி, செப். 5—

இப்போது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற பணவீக்க' நிலைமையை சர்க்கார் தங்களால் இயன்ற அளவில் கட்டுப்படுத்த முயற்சி செய்வார்களென்றும், அதே நேரத்தில் மக்களும் இப்போது தங்களுடைய செலவினங்களைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்றும் மத்திய திட்ட இலாகா அமைச்சர் குல்சாரிலால் நந்தா, மாநிலங்கள் சபையில் கேட்டுக்கொண்டிருக்கிருர்.

மேலும் அவர், 'திட்ட விஷயத்தில் பற்பல பகுதிகளிடையே ஏற்றத்தாழ்வு இருக்கிறதென்ற உணர்வு ஒன்று மக்களிடையே நிலவிவருகிறது. இம்மாதிரியான குறைகள் எதுவும் ஏற்பட இடம் கொடுக்காமலிருப்பது திட்டக் குழுவின் முக்கிய வேலைகளுள் ஒன்ருகும்.

"இதுபோலவே, கிராமங்களின் அபிவிருத்தியும் சரிவரக் கவனிக்கப்படவில்லை என்றும் மற்ருரு புகார் இருக்கிறது. கிராமங்கள், நகரங்கள் இரண்டுமே முக்கியம் தான். இரண்டின் இணக்கமான அபிவிருத்திக்கும் திட்டமிட வேண்டியதாக இருக்கிறது" என்றும் குறிப்பிட்டிருக்கிருர்.

சிங்கப்பூருக்கு சுதந்திரம்

புதிய பிரதமர் நம்பிக்கை

சிங்கப்பூர், செப். 5—

சிங்கப்பூருக்குப் பூரண சுய ஆட்சி உரிமை பெறுவதற்காக, அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குள் மீண்டும் பிரிட்டிஷ் சர்க்காருடன் தாம் பேச்சு வார்த்தைகள் நடத்த இருப்பதாகவும், அப்பேச்சு வார்த்தைகளில் வெற்றி கிட்டுமானுல் சிங்கப்பூரின் புதிய அரசியல் திட்டம் உருவாகுமென்றும், தோல்வியுறின், தாம் பதவி பெற்றதின் நோக்கமே முடிவடைந்துவிடும்—அதாவது தாம் பதவியைத் துறந்து விடுவதாகவும் சிங்கப்பூர் முதலமைச்சர் லிம்யூ ஹாக் என்பார் தெரிவித்திருக்கிருர்.

இப்போது இருக்கிற சட்டசபை 1957 வரை நீடித்திருக்கும் ஆனுல் அதுவரை தாம் பதவி வகிக்க விரும்பவில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார் ஒருவேளை இந்தப் பேச்சு வார்த்தைகள் ஏப்ரல் மாதத்தில்தான் என்றில்லாமல் அதற்கு இரண்டோ மூன்ரோ மாதங்கள் முன்னரே கூட நடைபெறலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்திருக்கிருர்.

காகித டிக்கெட்டுகள்!

சென்னை, செப். 5—

இரயில்வேக்களில் இதுவரை கொடுக்கப்பட்டு வந்த டிக்கெட்டுகள் அனைத்தும் அட்டைக் காகிதங்களிலேயே அச்சடிக்கப்பட்டு வந்தன. இப்போது, அந்த அட்டைக் காகிதங்களின் பற்ருக்குறையால் தென்பகுதி இரயில்வேக்களில் வெறும் காகிதத்திலேயே டிக்கெட்டுகள் அச்சடிப்பதென முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம்!

கடந்த இரண்டு மூன்று மாதங்களாகத் தென்பகுதி இரயில்வேயில் உள்ள பல இரயில் நிலையங்களில் டிக்கெட்டுகள் இல்லாமல், வெறும் காகிதத்தில் எழுதிக் கொடுக்கப்பட்டனவாம். இப்போது இதனைச் சமாளிக்க அவசர கால ஏற்பாடாகவே இம்முறையை மேற்கொள்ள தென்பகுதி இரயில்வே அதிகாரிகள் மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனராம்!

இரண்டாம் ஐந்தாண்டு திட்ட காலத்தில்!

தென்பிராந்திய இரயில்வே பெறும் பலன்!

புதுடில்லி, செப். 3—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், தென்பிராந்திய இரயில்வேயில் 212 புதிய இரயில் எஞ்சின்கள் கிடைக்கப்பெறும் என்றும், இவற்றுள் 93 எஞ்சின்கள் 'மீட்டர் கேஜ்' பாதை எஞ்சின்கள் என்றும் தெரிய வருகிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், இந்திய இரயில்வேக்களில் 8,500 சாமான் வண்டிகள் பெறப்படும் என்றும், இவற்றுள் 3,600 பெட்டிகள் மீட்டர் கேஜ் வகையைச் சேர்ந்தவையாயிருக்கும் என்றும் கூறப்படுகிறது.

இது தவிர, 450 புதிய பிரயாணிகள் இரயில் பெட்டிகளும், அவற்றுள் 180 மீட்டர் கேஜ் பெட்டிகள் அடங்கியிருக்கும் என்றும் தெரிகிறது இதற்காக இந்திய சர்க்காருக்கு ரூ. 28 கோடி செலவாகலாமென்றும் எதிர்பார்க்கப்படுகிறதாம்.

இலட்சத் தீவுகளுக்கு

மக்கள் சபையில் பிரதிநிதித்துவம்

புதுடில்லி, செப். 5—

இலட்சத் தீவுகள், அமின் தீவுகள் ஆகியவற்றுக்கு டில்லி மக்கள் சபையில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படும் என்று மக்கள் சபையில் உள்நாட்டமைச்சர் பண்டித பந்த் அறிவித்திருக்கிருர். அங்கிருந்து ஒரு பிரதிநிதி நியமிக்கப்படுவார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்போது, மக்கள் சபையில் அந்தமான், நிக்கோபார் தீவுகளுக்கென ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அந்தமான், நிக்கோபார் தீவுகளுக்கு வேறு புதுப் பெயரிட வேண்டுமென்று பல உறுப்பினர்கள் யோசனை தெரிவித்திருக்கின்றனர். சுபாஷ் தீவு, வீர சாவர்க்கார் தீவு, பரமானந்தத் தீவு என்று சில பெயர்களை உறுப்பினர்கள் தெரிவித்திருக்கின்றனர். பிறகு, சுபாஷ் சந்திர போஸின் பெயருடன் அத்தீவை அழைக்க அவ்வுறுப்பினர்கள் அனைவரும் இறுதியில் இணக்கம் தெரிவித்தனராம்.

சென்னையில் பாதரட்சை பயிற்சி நிலயமாம்!

சென்னை, செப். 6—

இந்த ஆண்டு முடிவிற்குள் பலவிதமான பாதரட்சை தயாரிப்பில் பயிற்சி அளிப்பது பற்றிய அகில இந்தியத் திட்டம் சென்னையில் அமுலுக்குக் கொண்டுவரப்படுமெனத் தெரிகிறது.

சுமார் ரூ. $7\frac{1}{2}$-இலட்சம் செலவில் இந்தப் பயிற்சி நிலயம் நிறுவப்படும்; துவக்கத்தில் 100 பேருக்குப் பயிற்சி தரப்படும்; பயிற்சி பெறுவோர் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 50 உதவித் தொகை அளிக்கப்படும்; எஸ். எஸ். எல். சி. தேறியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்; அவர்களுக்குப் பாதரட்சைத் தயாரிப்பில் சற்று அனுபவமும் இருக்கவேண்டும்—என்பெல்லாம் கூறப்பட்டுள்ளது. சென்னை நகரச் சுற்றுப்புறத்தில் ஓரிடம் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது.

தீண்டாமையை ஒழிக்க பம்பாய் சர்க்கார் திட்டம்

கலப்புக் குடியிருப்புகள் அமைக்க மானியம்

பம்பாய், செப். 4—

பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும் இதர முன்னேறிய வகுப்பினரும் ஒன்று கூடி வாழ்வதற்கான திட்டம் ஒன்றை பம்பாய் சர்க்கார் வெளியிட்டிருக்கின்றனராம்.

இந்த இரு சாராரும் கூட்டாக வாழ்வதற்காக வீடுகள் பலவற்றைக் கட்டுவதற்கு வட்டியில்லாத கடனும் மானியமும் சர்க்கார் வழங்குமாம்.

தீண்டாமையை ஒழிப்பதற்காக உதவுவதற்கு இதர மக்களையும் தூண்டுவதற்காகவே கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், பல வகுப்பினரும் கலந்து வாழ்வதற்கான வீடு கட்டும் திட்டங்களைச் சர்க்கார் புகுத்தி வருகின்றனராம்.

செய்திச் சுருள்

★

மதுரைத் தமிழ்ச் சங்க மாணவர் மன்றம்

23—8—56 இரவு 8½ மணிக்கு மேற்படி சங்க மாணவர் மன்ற அமைப்புக் கூட்டம் சங்கக் கட்டிடத்தில் தோழர் அ. சண்முகக் கனி தலைமையில் நடைபெற்றது. மன்றத்தின் அவசியம் குறித்தும் அது இயக்கும் வழி முறைகள் பற்றியும் தோழர் வெங்கடாசலம் விளக்கிப் பேசினர். மன்றத்திற்கு 'செந்தமிழ்க் கல்லூரி மாணவர் மன்றம்' என்று பெயரிடப் பெற்றது. பின்னர் செயற் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

காரைக்குடி வள்ளுவர் படிப்பகம்

19-8-56 இரவு 8-45 மணிக்கு திரு. பழ. கருப்பன் தலைமையில் நடைபெற்ற மேற்படி படிப்பக உறுப்பினர் கூட்டத்தில், திரு. கரு. இளந்தோழன், லெ. பழனியப்பன், சி. சிவநேச பாண்டியன், சுப. பஞ்சவர்ணன், மெ. சீனிவாசன் ஆகியோர் முறையே தலைவர், துணைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முன்னாள் நிர்வாகிகளுக்குப் பாராட்டும் தெரிவித்துக் கொள்ளப்பட்டது. பின்னர் தேநீர் விருந்தும் நடைபெற்றது.

முத்தமிழ் நாடக மன்றத் துவக்கம்

22—8—56 மாலை 6 மணியளவில் சென்னை மூலக்கடையில், தோழர் மணி தலைமையில் மேற்படி மன்றம் அமைக்கப்பட்டது. முத்தமிழ்க் கலையைப் பற்றியும், மன்றத்தின் வலிவையும் பொலிவையும் குறித்தும் பலர் பேசினர். பின்னர் மன்றத்தின் முதல் நாடகமாக 'சாகசக்காரர்' என்ற நாடகத்தை நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. தோழர்கள் அமுதவாணன், மதிமாறன், சந்தோஷம் ஆகியோர் முறையே செயலாளர், நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆமதாபாத் முத்தமிழ் நாடக மன்றம்

21—8—56 காலை 10 மணியளவில் சமால்பூர் தி மு. கழக இல்லத்தில், மேற்படி மன்ற உறுப்பினர் கூட்டம் தோழர் ஆ. கலைமணி தலைமையில் நடைபெற்றது. மன்றத்தின் வளர்ச்சி குறித்தும், மற்றும் பல முக்கியப் பிரச்சினைகளும் ஆராயப்பட்டன. பின்னர் தோழர் கெ சந்திரன் அவர்களைச் செயலாளராகக்கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

கோவை அழகிரி சொற்பயிற்சி மன்றம்

2—9—56 காலை 10 மணிக்கு, மேற்படி படிப்பக மனையில், 'ஒலி-ஒளி - ஒழி' எனும் தலைப்பில், தோழர் க. அங்குதாசு தலைமையில், தோழர்கள் பெ. வெ. அசலம், கு. ப. செகந்நாதன்; கு. பா. சு. மணி, எம். கே. சாமி, சாகுல் அமீது, சின்னசாமி, மு இராமநாதன் ஆகியோர் பேசினர்.

தாழ்த்தப்பட்டோர் சங்க அமைப்பு

19—8—56ல், திருப்பத்தூர் தாலுகா, கல்லல், அதிகாம், திருப்பத்தூர் ஆகிய ஊர்களைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட சமூகத்தவரடங்கிய கூட்டம் ஒன்றில், மேற்படி தாலுகா தாழ்த்தப்பட்டோர் சங்கம் அமைக்கப்பட்டு, திரு வி. கே. வெள்ளைச்சாமியைத் தலைவராகக் கொண்ட நிர்வாகக் குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. பின்னர், கள்ளிப்பட்டியில் நடைபெற்றத் தீ விபத்திற்காக, மேற்படி சங்கத்தின் சார்பில் ரூ. 77—4—0 நன்கொடை அளிக்கப்பட்டது.

மீன்பிடிப்போர் கிளைச் சங்கப் பொதுக்கூட்டம்

சென்னை, இராயபுரம் — காசிபுரம் மீன்பிடிப்போர் கிளைச் சங்க பொதுக்கூட்டம், சங்கக் கட்டிடத்தில் 4-9-56 மாலை 6 மணிக்கு திரு. பி. கோவிந்து தலைமையில் நடைபெற்றது; திரு. எம். ஆர். சி இராமச்சந்திரன் மீன் கொடியை யேற்றிவைத்தார். திருவாளர்கள் பி பி. சாமி, கே. குப்புசாமி, டி. ஆறுமுகம், கே குப்புராஜ், என். சிவரத்தினம் ஆகியவர்கள் 'மீன் இலாகா ஊழலும் மீனவர் நிலையும்' என்பது பற்றிப் பேசினர். மீன் இலாகாவிற்கு ஆலோசனைக் குழு ஏற்படுத்த வேண்டுமென சர்க்காரைக்கேட்டுக் கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

பன்னீர்செல்வம் படிப்பகத் திறப்பு விழா

26—8—56 பிற்பகல் 6 மணியளவில் அக்காமலை தி மு கழகக் கிளை சார்பில் பன்னீர்செல்வம் படிப்பகத்தைத் தோழர் தே. சி. மணி திறந்துவைத்தார். விழாக் கூட்டத்திற்குத் தோழர் அ அர்ப்புதமணி தலைமை வகித்தார் தோழர்கள் இ சின்னப்பன், ந. ப. ஆறுமுகம். மு சீனிவாசன், ந ப. முத்தையா, தே சி. மணி ஆகியோர் நூலகம், நூலின் கருத்து, தி. மு கழகத் தொண்டர்களின் கடமை பற்றியும் பேசினார்கள்.

கோவை முத்தமிழ் மறுமலர்ச்சி மன்றம்

25—8—56 இரவு 10 மணியளவில் மேற்படி மன்றச் சார்பில், தோழர் சக்திவேல் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் 'உலக நிலைமை' எனும் பொருள் பற்றி தோழர்கள் இரா. நடராசன், இரா. கிருட்டிணன், ஈ. த. சண்முகம், மு சு. மணியம், க ஆறுமுகம், எச். எஸ். முனுசாமி வெ. நடராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

26—8—56 மாலை 3 மணியளவில் தோழர் க. ஆறுமுகம் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் கி. மனோகரன் தந்தையாரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

28—8—56 இரவு 7 மணியளவில் மன்றச் சார்பில், தோழர் க. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் எஸ் வ இராசமாணிக்கம், ஈ. த. சண்முகம், வெ. ராமசாமி, இரா. நடராசன், இரா. கிருஷ்ணன், அனுவர்த்தீன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் 'எதிர்ப்புகள்' எனும் தலைப்பில் நிகழ்த்திய சொற்பொழிவு ஒலிபரப்பப்பட்டது.

பொன்மலை திருக்குறள் கழகம்

26—8—56 மாலை 6½ மணிக்கு, மேற்படி கழகத்தின் துவக்க விழா, பொன்மலை இரயில்வே படிப்பகத்தில் இரயில்வே போர்டு கல்வி ஆலோசகர் திரு. வி. டி. எம் திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது. திரு இராமமூர்த்தி அவர்கள் 'வள்ளுவர் கண்ட வளநாடு' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினார். தலைவர் தம் முடிவுரையில், 'திருக்குறள் என்றும் மாறாத அடிப்படையான உண்மைகளைக் கொண்டது; அதனால் என்றும் நின்று நிலவும் இயல்புடையது. பல மொழிகளிலும் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்றாலும், வடமொழி சாகுந்தலம் மேனாட்டில் பரவியிருப்பதைப் போல, திருக்குறளின் பெருமை பரவவில்லை. இதன் காரணம் ஆராய்ந்தறிதற்குரியது' என்று கூறினார்.

அண்ணாமலைநகர் தி.மு.க.-மாணவர் கிளை

23—8—56 மாலை 5 மணியளவிற்கு, குடிதண்ணீர்க் குளத்தின் வடகரையில் தோழர் பு. இராமசாமி தலைமையில், கிளைக் கழகத் தேர்தல் கூட்டம் நடைபெற்றது. செயலாளர்: து சோமசுந்தரம்; துணைச் செயலாளர்கள்: கணபதி இராம. சுப்பையா, கா. சிவப்பிரகாசம்; பொருளாளர்: இராமானுசம்; நிர்வாகக் குழு உறுப்பினர்கள்: செயலாளர், துணைச் செயலாளர்கள், பொருளாளர் உட்பட தோழர்கள் இராமநாதன், க. பாலகிருட்டிணன், சி. சீனிவாசரமணன்; பொது உறுப்பினர்கள்: பி. சதாசிவம், என். கிருட்டிணமூர்த்தி, டி. வாசுதேவன், சா. தேவராசன், கா. சிவப்பிரகாசம், சி. சிவசங்கு, சி. நடராசன், வி. இராமநாதன், வ. இராமானுசம், இரா. சுந்தரம், சி சீனிவாச ரமணன், க. சிங்காரவேலு, சுப மணிமொழியன், து. சோமசுந்தரம், சே சிங்காரவேலு, க. பாலகிருட்டிணன், என். எஸ். சச்சிதானந்தம், கணபதி இராம. சுப்பையா. பின்னர் நிர்வாகக் குழுவை அமைக்கவும், புதிதாக இரண்டு பொது உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளவும் பொறியியல் கல்லூரியிலிருந்து இன்னும் இரண்டு பொது உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளவும், நிர்வாகக் குழுவில் இருக்கும் காலி இடத்தைப் பூர்த்திசெய்துகொள்ளவும், வேண்டுமானால் இன்னும் ஒரு துணைச் செயலாளரை நியமித்துக் கொள்ளவும் செயலாளருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

வண்ணை இளங்கோ கலை மன்றம்

30—8—56 இரவு 7 மணிக்கு நடைபெற்ற மன்றச் செயற்குழுக் கூட்டத்தில், மன்றச் சார்பில் நடைபெறும் நூலகத்திற்கு 'அண்ணா நூலகம்' எனப் பெயரிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டதுடன், செப்டம்பர் இறுதி வாரத்தில் மன்ற ஆண்டு விழாவும், நூலகத் திறப்பு விழாவும் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

சங்கரநயினார்கோவிலில் பொதுக்கூட்டம்

26—8—56 இரவு 7 மணியளவில் சங்கரநயினார்கோயில் மறுமலர்ச்சி நாடக மன்ற கலை விழாப் பொதுக்கூட்டம் காந்தி திடலில் தோழர் அ. சங்கரன் தலைமையில் நடைபெற்றது. தோழர் ச. ஆவுடையப்பன் வரவேற்புரை வழங்கினார். தோழர் டி. எம். சுப்பையா விழாவைத் துவக்கிவைத்தார். தோழர்கள் சுரதா, டாக்டர் சேதுராசு, இரா. பழனிவேலு ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தலைவர் முடிவுரைக்குப்பின், மறுமலர்ச்சி நாடக மன்றத்தாரால் அண்ணா அவர்கள் எழுதிய பெரிய மனிதர்கள்' ஓரங்க நாடகம் சிறப்பாக நடைபெற்றது

மேலூர் மருத்துவர் குல சங்கம்

மதுரை மாவட்டம் மேலூர் தாலுகா டவுன் மருத்துவர் குல சங்கக் கூட்டம் தோழர் பெ. கருப்பையா தலைமையில் நடைபெற்றது. மருத்துவர் சமூகத்தைத் தாழ்த்தப்பட்ட வகுப்பில் சேர்க்க வேண்டுமென அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதாக அக்கூட்டத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது

குடந்தை – துவரங்குறிச்சி இளைஞர் தமிழ் மன்றம்

2—9—56 மாலை, தோழர் டி எஸ். ஆர். கோபால் தலைமையில் நடைபெற்ற மேற்படி மன்ற உறுப்பினர் கூட்டத்தில், 12—8—56ல் நடைபெற்றப் பொதுக் கூட்ட வரவு-செலவுகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், 23—9—56ல் திராவிட நாடு பிரிவினை நாள் விழா கொண்டாடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

பழவேற்காட்டில் திருக்குறள் விழா

29—8—56 மாலை 5½ மணியளவில் பழவேற்காடு இளைஞர் முற்போக்குக் கழகத்தின் சார்பில், திருக்குறள் விழா, தோழர் பி. செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கே. இராதாமணாளன், இரா. சு சு. மணி, அ நடராசன் ஆகியோர் சென்னை சர்க்காரின் கொடூரச் செயல்களை விளக்கிப் பேசினர். பின், தோழியர் சத்தியவாணி-முத்து அம்மையார் வள்ளுவனுடையவும், திருக்குறளுடையவும் பெருமைகளை எடுத்துக்கூறி, மக்கள் நல்லதோர் அரசியல் கட்சியைத் தேடிப் பிடித்து அதன்வழி நடக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

பின்னர் தோழர் என். சீவரத்தினம் அவர்கள், திருவள்ளுவருக்கு நினைவு நாளாக விடுமுறை விடாத சர்க்காரின் போக்கைக் கண்டித்தும், மக்களின் தேவைகளைக் கவனியாது, அவர்களின் அவல நிலையை ஏறெடுத்தும் பாராதிருக்கும் சர்க்காரின் போக்கைக் கண்டித்தும், எனவே மக்கள். வருகிற பொதுத் தேர்தலில் சிந்தித்துக் காரியமாற்றுமாறு கேட்டுக்கொண்டும் சொற்பொழிவாற்றினார். சொற்பொழிவாளர்களுக்குக் கழகத்தின் சார்பிலும், வண்ணாரப்பேட்டை கலை அகத்தின் சார்பிலும் கைத்தறித்துணிகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன. பின்னர், வள்ளுவர் நாளுக்கு விடுமுறை விடுதல், பழவேற்காடு கழக ஆரம்பப் பள்ளியை உயர்தர ஆரம்பப் பள்ளியாக்குதல், கழகப் பள்ளி ஏழை மாணவர்களுக்கு இலவசப் பாலுணவு அளித்தல், விசைத்தறித் திட்டத்தைக் கைவிடுமாறு வேண்டுதல், பழவேற்காட்டில் சாலை அமைக்கும் அரசியலாரைப் பாராட்டுவதுடன், வேலை இழந்து கிடக்கும் பலதுறைத் தொழிலாளருக்கும் வாழ்க்கை வழிசெய்யத் தொழிற்சாலை அமைத்தல் ஆகிய கோரிக்கைகளடங்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சென்னை தாய்மார் கழக திருக்குறள் வகுப்பு

2—9—56 பிற்பகல் 4 மணிக்கு, சென்னை - பெத்துநாய்க்கன் பேட்டை தாய்மார் கழகச் சார்பில் வாரந்தோறும் நிகழ்ந்து வரும் திருக்குறள் வகுப்பின் பொருட்பால்—அரசியல் நிறைவு விழா, சென்னை பிரும்ம சமாஜம் உயர்தர ஆரம்பப் பள்ளியில் திருமதி எஸ் கிருஷ்ணவேணி அம்மையார் தலைமையில் நடைபெற்றது. திரு மயிலை - சிவமுத்து அவர்கள் கழகச் சார்பில் இரண்டு ஆண்டுகளாக இடைவிடாது திருக்குறள் வகுப்பு நடைபெற்று வருவதைக் குறிப்பிட்டார். தோழியர் கலைச் செல்வியார், ஹெலன் ஜாய்ஸ், கே. வி. சண்பகம், பி. வி. பரமேஸ்வரி, வெற்றிமகள் ஆகியோர் குறளின் சிறப்பை விளக்கினர். சண்முகானந்த சங்கீத கைத்தொழில் பள்ளிக் குழந்தைகளால் ஆடல் பாடல் நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. திரு எஸ் எஸ். அருணகிரிநாதர் அவர்கள் பரிசு பெற்றக் குழந்தைகட்குப் பரிசுகள் வழங்கினர்.

சபாநாயகர் சிவசண்முகம் மாணவர் இல்லம்

2—9—56 காலை 9 மணிக்கு, சென்னை சபாநாயகர் சிவசண்முகம் மாணவர் இல்லத்தில் திரு ஆர். சபேசன் தலைமையில் நடைபெற்ற விழாவில், திருப்பூர் காதர் கிட்டிங் கம்பெனி உரிமையாளர் எஸ். ஏ. காதர் அவர்களால் நன்கொடையாக அளிக்கப்பட்ட ரூ 100 பெறுமானமுள்ள பனியன்கள் திருமதி எம். தமிழ்ப்பாவை நாராயணசாமி அவர்களால் மாணவர்களுக்கு அளிக்கப்பட்டன. திரு எம். மாயாண்டி, ஆல்பிரட், ஜெபாக்கியநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். திரு ஏ. கே. அரங்கநாதன் அவர்கள் ரூ. 100 நன்கொடை அளித்ததாக அறிவிக்கப்பட்டது.

செங்கற்பட்டு மாவட்ட தாழ்த்தப்பட்டோர்

பெடரேஷன் 2-வது மாநாடு

16—9—56 பகல் 8 மணியிலிருந்து இரவு 9 மணி வரை தாம்பரம் பஞ்சாயத்து போர்டு அருகில் உள்ள தாதா இரட்டைமலை சீனிவாசன் திடலில் நடைபெறும்.

தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 'ரிசர்வ் ஸ்தானங்களை' ஒழித்துக்கட்ட அரசியலாரைக் கோரியும், சகல துறைகளிலும் பின்தங்கியிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களின் கோரிக்கைகளை ஆட்சியாளர் அலட்சியமாகக் கருதி வருவதைக் கண்டிக்கும் வகையில் தமிழ் நாடு முழுவதும் பெடரேஷன் கட்சி மாபெரும் போராட்டம் நடத்துவது பற்றியும், மற்றும் பல முக்கியப் பிரச்சினைகளைப் பற்றியும் முடிவெடுக்கப் படும்.

அன்று பகல் 2 மணிக்கு தாம்பரம் இரயில்வே நிலையத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு மாநாட்டுப் பந்தலை அடையும்.

மதுரை கல்லக்குடி நடராசன் படிப்பகம்

1—9—56 இரவு 11 மணிக்கு, மேற்படி படிப்பக உறுப்பினர் கூட்டம் தோழர் நா. அன்புச்செழியன் தலைமையில் நடைபெற்றது. 16—9—56ல் திராவிட நாடு பிரிவினை நாள் விழாக் கொண்டாடுவதெனவும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

பிலாய் உருக்குத் தொழிற்சாலை

நிர்வாகப் பயிற்சி பெற இந்திய எஞ்சினியர்கள் ரஷ்யா பயணம்

பம்பாய், செப். 4—

பிலாய் உருக்குத் தொழில் திட்ட ஒப்பந்தத்தின்கீழ் தொழில் நுட்பப் பயிற்சி பெற இருக்கும் 50 பேர் கொண்ட முதல் குழுவினர், இன்று ரஷ்யாவுக்குப் புறப்பட்டுவிட்டனராம்.

பட்டதாரிகளும் ஜூனியர் எஞ்சினியர்களுமான இந்தக் குழுவினர், ஒன்பது மாதகாலம் ரஷ்யாவில் தங்கியிருந்து அங்குள்ள உருக்கு ஆலைகள் வேலைசெய்வதை நேரில் இருந்து தெரிந்துகொள்வார்களாம்.

பம்பாய் அருகே டிராம்பேயில் ஒரு அணு உலை

ஒன்டோரியோ, செப். 4—

பம்பாயிலிருந்து 7 கல் தொலைவிலுள்ள டிராம்பேயில் அணுஉலை ஒன்றை நிறுவ 140 இலட்சம் டாலர் செலவாகலாம் என்றும், இதற்குக் கானடா 75 இலட்சம் டாலர் தந்து உதவலாம் என்றும், மீதித்தொகையை இந்திய சர்க்காரே ஏற்றுக்கொள்ளும் என்றும் கூறப்படுகிறது.

மேலும் கானடாவிலுள்ள அணு உலைகள் எப்படி வேலை செய்கின்றன என்பதை நேரில் கண்டறிய இந்தியாவிலிருந்து 20 விஞ்ஞானிகளடங்கிய குழு கானடாவந்து சேர்ந்துள்ளதாம்.

அடிமைத்தனத்தை ஒழிக்கத் தீர்மானம்

ஜெனிவா, செப். 4—

உலகில் எங்கெங்கே அடிமைத்தனம் நிலவுகிறதோ அங்கெல்லாம், அடிமைத்தனத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதற்காகத் தீர்மானம் ஒன்றை ஐ. நா. கூட்டிய மாநாடு ஒன்று நிறைவேற்றியுள்ளது.

ஆசிரியர்களுக்கு

கட்டாய இன்சூரன்ஸ் திட்டம்

தனிப்பட்ட கல்வி நிலையங்களிலும், உள்ளாட்சிக் கழகப் பள்ளிகளிலும் அலுவல் பார்க்கும் ஆசிரியர்களுக்குப் பயன் தரக்கூடிய சேம நல நிதி இன்சூரன்சு, ஓய்வு கால உதவி ஊதியத் (பென்சன்) திட்டமொன்றைக் கொண்டு வர சென்னை அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

பள்ளி ஆசிரியர்களின் ஓய்வு கால உதவி ஊதியத் திட்டம் அரசாங்க ஊழியர்களின் ஓய்வு கால உதவித் திட்டத்தைப் போன்று இருக்கும். அத்துடன் ஆசிரியர்களுக்காகக் கட்டாய இன்சூரன்சுத் திட்டம் ஒன்றும் கொண்டுவரப் படும்.

இத்திட்டத்திற்கு ஆசிரியர்களிடமிருந்தும் பங்குத் தொகை வாங்கப்படும்.

இன்சூரன்சுத் திட்டம் 40வயது வரையுள்ள ஆசிரியர்களுக்காகக் கொண்டுவரப்படும் இன்சூரன்சுக் கட்டணத் தொகைகளை அந்த ஆசிரியர்களே கட்ட வேண்டும்.

இப்போது அரசாங்கம் புதிதாகக் கொண்டு வருவதென முடிவு செய்யப்பட்டுள்ள திட்டத்தின் நடைமுறை விதிகள் 1955-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியில் இருந்து அமுலுக்கு வருவதாகக் கொள்ளப்படும். அந்தத் தேதிக்குப் பிறகு ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் அனைவருக்கும் அத்திட்டத்தின் சலுகைகள் கிடைக்கும்.

1955 ஏப்ரல் 1-ந் தேதிக்குப் பிறகு தலத்தாபனப் பள்ளி ஆசிரியர்களுக்கு சேவை கால சன்மானத் தொகை தரப்பட மாட்டாது.

விசைத் தறியைப் பயன்படுத்தினால்!

நெசவாளருக்கு நிதி உதவி தரப்படுமாம்

விசைத் தறியைப் பயன்படுத்தும் கைத்தறி நெசவாளர்களுக்கு நிதி உதவி அளிக்க சர்க்கார் உத்தேசித்திருக்கிறதாம்!

மாநிலங்கள் சபையில் இதுபற்றி அறிவித்த அமைச்சர் கனுங்கோ, 1956-58-ல் 35,000 விசைத்தறிகள் ஏற்படுத்த உத்தேசித்திருப்பதாகவும், அவைகளில் 13,000 விசைத்தறிகள் 1956-57-ல் ஏற்படுத்தப்படுமென்றும் அறிவித்தார்.

சமனேசுவரம் அண்ணா படிப்பக ஆண்டு விழா

9—9—56 மாலை 6 மணிக்கு; மேற்படி படிப்பக 2-வது ஆண்டு விழாப் பொதுக்கூட்டம், படிப்பகத்தின் முன்னிலையில், திரு. எம். வி. இராசு தலைமையில் நடைபெறும். தோழர்கள் டி. கே. சீனுவாசன், ஆர். எஸ். பிரகாசம், எஸ். வி. பாண்டியன் ஆகியோர் பேசுவர்.

செங்குன்றத்திற்கு

(ரெட்ஹில்ஸ்—கிராண்டு லயன் கிராமம்)

அண்ணா

வருகை

★

10—9—56 மாலை 6-மணிக்கு, செங்குன்றம் (ரெட் ஹில்ஸ்) அடுத்த கிராண்டு லயன் கிராம மாரியம்மன் கோயில் மைதானத்தில், வ. உ. சி. மன்ற 4-ம் ஆண்டுவிழா, தோழர் புழல்—துரைசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும்.

அண்ணா அவர்களும், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தோழர் டி. சண்முகம் எம்.எல்.ஏ., தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோரும் சொற்பொழிவாற்றுவர்.

* * *

நாரவாரிக்குப்பம் ஊராட்சி மன்ற வரவேற்பு

அன்று மாலை 5-மணிக்கு, செங்குன்றம் — நாரவாரிக்குப்பம் ஊராட்சி மன்றச் சார்பில், அண்ணா அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்படும்.

சிவகங்கை நகர தி. மு. க. தோழர்களுக்கு :

9—9—56 காலை 10 மணிக்கு, பாண்டியன் நினைவுப் படிப்பகத்தில், சிவகங்கை நகர தி. மு. கழக (கிளை) தேர்தல், தோழர் கி. மனோகரன் தலைமையில் நடைபெறும்.

சிவகங்கை பாண்டியன் நினைவுப் படிப்பக ஆண்டு விழா

9—9—56 மாலை 6-30 மணிக்கு மேற்படி படிப்பக 2-வது ஆண்டு விழாப் பொதுக்கூட்டம், அரண்மனை வாயில் முன் நடைபெறும். தோழர் கி மனோகரன் பேசுவார்.

திருக்குறள் வகுப்பு

8—9—56 மாலை 7 மணிக்கு, சென்னை—இராயபுரம் இலக்கிய மன்றச் சார்பில், கல்மண்டபம் நகரசபை ஆண்பள்ளியில், திரு அ. ஞானசுந்தரம் அவர்கள் குறளில் 'வாழ்க்கைத் துணை நலம்' என்ற அதிகாரத்திற்குப் பொருள் கூறி விரிவுரை நிகழ்த்துவார்.

சொற்பயிற்சிக் கூட்டம்

8—9—56 காலை 9 மணிக்கு, சென்னை — பெத்துநாய்க்கன் பேட்டை மக்கள் மன்றச் சார்பில், மன்ற அலுவலகத்தில் (எண் 17, திருப்பள்ளித் தெரு), தோழர் அருசக்ரபாணி தலைமையில், 'அரசியலும்—மொழியும்' என்ற தலைப்பில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும்; தோழர்கள் பலர் பேசுவர்; தோழர் சி. ஆர். பாலசுந்தரம் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

கழகக் கூட்டங்கள்

★

தோட்டபாளையம் :

(வேலூர்—வ. ஆ.)

9—9—56 மாலை 6-30 மணிக்கு

தலைவர் : வி. எல். காந்தன்

பேசுவோர்:

க. அன்பழகன்

அ. கருத்தோவியன்

புகழேந்தி

★

காங்கேயநல்லூர் :

அழகிரி திடலில்

9—9—56 மாலை 6 மணிக்கு

தலைவர் : மு. சண்முகம்

பேசுவோர்:

ஏ. எல். சி. கிருட்டிணசாமி

ஏ. கே. வில்வம்

இளஞ்செழியன்

அருண்மொழி—வில்லம்

நரசிம்மன், கண்ணன்

(குறிப்பு :—மாலை 5 - மணிக்கு தோழர் மா. பா. சாரதி அவர்கள் கழகக்கொடி ஏற்றுவார்)

★

வெள்ளாங்கோவில் :

(கோவை மாவட்டம்)

சிறுவலூர் சந்தைக்கு எதிர்ப்புறம்

9—9—56 மாலை 6 மணிக்கு

தலைவர் : பி. கே. ஆறுமுகம்

பேசுவோர் :

மு. முத்துரத்தினம், அன்பரசு

★

திருப்புத்தூர் :

அண்ணா திடல்

10—9—56 மாலை 6 மணிக்கு

தலைவர் : காத்தமுத்து

பேசுவோர் :

கி. மனோகரன்

அ. குருசாமி, பி. இராமையா

பட்டுக்கோட்டை வட்ட தி. மு. கழக உறுப்பினர் கூட்டம்

"9—9—56 காலை 9 மணியளவில், பேராவூரணி முசாபரி பங்களாவில், பட்டுக்கோட்டை வட்ட தி. மு. கழக உறுப்பினர் கூட்டம், தோழர் அடைக்கலம் அவர்கள் முன்னிலையில் நடைபெறும்; அதுபோது, பொதுத் தேர்தலில் தோழர்கள் நிலை குறித்தும், மற்றும் பல முக்கியப் பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்படும்,"

என்று, பட்டுக்கோட்டை வட்டச் செயலாளர் எம். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அறிவிக்கிறார்.

குணியமுத்தூர் தி. மு. க. செயற்குழுக் கூட்டம்

9—9—56 காலை 8 மணியளவில், கழகப் பணிமனையில், கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். செப்டம்பர் 21-ந் தேதி 'திராவிட நாடு பிரிவினை நாள்' விழா கொண்டாடுதல், கழகத்தின் எதிர்காலத் திட்டங்கள் போன்றப் பிரச்சினைகள் ஆய்வுக்குவரும்.

மதுரை — இலக்குமிபுரம் முத்து படிப்பக ஆண்டு விழா

9—9—56 மாலை 6 மணிக்கு, மதுரை இலக்குமிபுரம் குறுக்குத் தெருவில், முத்து படிப்பக 4-வது ஆண்டுவிழா, படிப்பகத்தின் முன்பு நடைபெறும். தோழர் என். சிவரத்தினம் சொற்பொழிவாற்றுவார்.

சென்னை - பெத்துநாய்க்கன் பேட்டை தாய்மார் கழகம்

8—9—56 பிற்பகல் 2-30 மணியளவில் சென்னை—1, முத்துக் கிருஷ்ணன் தெரு, 15-ம் எண் இல்லத்தில், திருக்குறளில் 'அங்கவியல்—அமைச்சு' என்ற அதிகாரத்தை விளக்கிப் பேராசிரியர் மயிலை சிவ-முத்து சொற்பொழிவாற்றுவார்.

* *

தேர்தல் நிதி சிறப்புக் கூட்டம்

8—9—56 சனி மாலை 6-மணி

கோகலே மண்டபம்

★

தலைவர் :

கே. ஏ. மதியழகன்

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள்

'இலக்கிய இன்பம்'

என்னும் பொருள்பற்றிப் பேசுவார்.

★

நன்கொடை : ரூ. 1; அணா 8.

குறிப்பு : 8—9—56 காலை 9-மணியிலிருந்தே கோகலே மண்டபத்தில் நுழைவுச் சீட்டுகள் கிடைக்கும்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

* *

திருமணங்கள்

9—9—56 காலை 7 மணியளவில், சென்னை 1-வது வட்ட தி. மு கழகத் தோழர் மா. முருகேசன்—தோழியர் ப. ஏகவல்லி திருமணம் தொண்டையார் பேட்டை, பெரியபாளையத்தம்மன் கோயில் தெரு, எண் 69, மணமகன் இல்லத்தில், தோழர் கே ஆர். டேனியல் தலைமையில் நடைபெறும். தோழர்கள் என். வி நடராசன், ஏ. வி. பி ஆசைத்தம்பி, முகவை - ஆர். எஸ் பாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

9—9—56 காலை 9-30 மணியளவில், சென்னை—நுங்கம்பாக்கம், அப்புராய்க்கன் தெரு, எண் 1 இல்லத்தில், தோழர் காஞ்சி—கல்யாணசுந்தரம் தலைமையில், தோழர் கிருஷ்ணசாமி—தோழியர் பர்வதாவர்த்தினி திருமணம் நடைபெறும். தோழியர் சத்தியவாணி-முத்து வாழ்த்துரை வழங்குவார்.

* * *

9—9—56 காலை 7 மணியளவில் விழுப்புரம் வட்டம் வளவனூர் பழந்தமிழர் தெருவில், ஊராட்சி மன்றத் தலைவர் கே. எம். முத்துகுமாரசாமி தலைமையில், தோழர் நம்பி. சி. சிவமாணிக்கம்—தோழியர் செங்கழுனி அம்மை; தோழர் நம்பி. சி. வீரபத்திரன்—தோழியர் இரா. ஏகவல்லியம்மை திருமணம் மணமகன் இல்லத்தில் நடைபெறும். 'தமிழர் திருமணம்' என்பது பற்றி தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

* * *

9—9—56 காலை 7 மணியளவில், காட்டுப்பட்டி (சேலம்)யில், தோழர் வெ. கு மாறன்—தோழியர் கண்ணம்மாள் திருமணம் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலைமையில் நடைபெறும்; பலர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

9—9—56 காலை 9 மணியளவில், சென்னை—இராயபுரம், காசிமாநகர், 3-வது தெரு, எண் 9 இல்லத்தில், புலவர்—கி. தியாகராசன் தலைமையில், தோழர் கு. சந்திரன்—தோழியர் இந்திரா திருமணம் நடைபெறும். தோழர்கள் பி. தங்கராஜ் எம்.சி., தில்லை-வில்லாளன், க. அறிவழகன், தில்லை-மறைமுதல்வன், பி இராசமாணிக்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

9—9—56 காலை 11 மணியளவில், திருமங்கலத்தில், தோழர் ச. இராமு—தோழியர் யசோதை திருமணம் நடைபெறும். தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர்

* * *

9—9—56 காலை 9 மணியளவில், காவேரிப்பட்டினம் மணமகன் இல்லத்தில், ஊராண்மைக் கழகத் தலைவர் ஏ. வி. பச்சயப்பனூர் தலைமையில், தோழர் வே. பெ. பெருமாள்—தோழியர் சரசுவதி திருமணம் நடைபெறும்; தோழர் எஸ். எஸ். தென்னரசு வாழ்த்துரை வழங்குவார்.

* * *

9—9—56 காலை 11 மணியளவில், மதுரை, இலக்குமிபுரம், 9-வது சந்து, எண் 15 இல்லத்தில், தோழர் என். சிவரத்தினம் தலைமையில், தோழர் சண்முகசுந்தரம்—தோழியர் சாந்தகுமாரி திருமணம் நடைபெறும்.

* * *

9—9—56 காலை 6 மணியளவில் பாலவாக்கம் (திருவள்ளூர் வட்டம்) மணமகன் இல்லத்தல் தோழர் பா உலகநாதன்—தோழியர் சகுந்தலை திருமணம் தோழர் ஏ. கே. வில்வம் அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ. கிருஷ்ணன், மராட்டியமன்னன், பா. சு. மணி ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

ஃ ஃ ஃ

9—9—56 காலை 9-மணிக்கு எரவாஞ்சேரியில் தோழர் டி வி சௌந்தரராசன் தலைமையில் தோழர் சுப்பிரமணியம் — தோழியர் அம்சவல்லி திருமணம் நடைபெறும். தோழர்கள் எ சந்தானம், எ. எஸ் -பாண்டியன், டி. கே. மூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

ஃ ஃ ஃ

9—9—56 காலை 9-மணிக்கு, குணியமுத்தூர் தி. மு கழகத் தோழர் வெ. நடராசன்—தோழியர் அரங்கநாயகி திருமணம், ஊராண்மைக் கழகத் தலைவர் திரு. எம். சுந்தரம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் கோவை—செழியன், மு. இராமநாதன், 'சிலம்பின் செல்வன்' ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

மணிக்கு 312 மைல்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

போடப்பட்டுள்ள சாலைகளில் இது மணி ஒன்றிற்கு $312\frac{1}{2}$ மைல் வேகம் ஓடமுடியும் என்றும நம்பப்படுகிறது.

இதனுடைய இயந்திர விசை முறை, சாதாரணமோட்டார்களின் முறையிலிருந்து வேறுபட்டதாம். இதன் எஞ்சின், சக்கரங்களுடன் இயந்திர விசையால் இணைக்கப்படவில்லை. பீச்சாணிலிருந்து அதிவேகமாக வெளியே தள்ளப்படும் 'வாயு'வின் விசையாலேயே இந்த மோட்டார் கார் ஓடுகிறது என்று அறிவிக்கப்படுகிறது.

இரயில்வேக்களில் இலஞ்ச ஊழல்!

தடுப்பதற்கு இந்திய சர்க்கார் தீவிர நடவடிக்கைகள்?

புதுடில்லி, செப். 6—

இரயில்வேயில் பணியாற்றும் ஒரு அதிகாரியின் நேர்மை, கண்ணியம் குறித்துச் சந்தேகம் எழுந்தால், அந்த அதிகாரி, தனது சொத்து விவகாரங்கள் பற்றிய விவரங்களைத் தெரிவிக்கக் கோரப்படலாம் என்றும், அவர் தெரிவிக்கின்ற விவரங்களை விசேடப் போலீஸ் போன்ற சுயேச்சையான இலாகா ஒன்று விசாரிக்கவேண்டும் என்றும் இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம்.

அந்த அதிகாரியின் சொத்துக்கள், அவரது குடும்பத்தினரின் சொத்துக்கள், உறவினரின் பண வசதிகள் ஆகியவை குறித்தும் விசாரணை நடத்தப்பெறலாமாம். ஒரு குறிப்பிட்ட அதிகாரி இலஞ்சம் வாங்கும் பழக்கமுடையவர் என்று தெளிவாகத் தெரிந்துவிடுமானால் பொறுப்பான எந்த ஒரு பதவியிலும் அவர் வைத்திருக்கப்படக் கூடாது என்றும் இந்திய சர்க்கார் கருதுகிறதாம்.

இந்த முடிவுகள் இரயில்வே போர்டுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.

ஏழ்மை, அறியாமைக்கு அடிமையாகியுள்ள கிராம மக்களை இரயில்வே அதிகாரிகள் துன்புறுத்துவது பற்றி இரயில்வே இலஞ்ச விசாரணைக் குழு செய்துள்ள சிபாரிசுகள் இரயில்வே அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளன என்றும், அந்தச் சிபாரிசுகள் மீது தக்க நடவடிக்கைகள் எடுக்குமாறு அதிகாரிகள் கோரப்பட்டிருக்கின்றனர் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம், ஏ.